بسم الله الرحمن الرحيم

**Friday Sermon** / வெள்ளிக்கிழமை குத்து.்.பா

**16 March 2018**

**(27 Jamad'ul Aakhir 1439 A.H)**

# *A Fulfilled Prophecy*

## ஒரு தீர்க்க தரிசனம் நிறைவடைகின்றது



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹீதும் தஅவசும் அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

**"அவன் விரும்புவோரை தன் அருளுக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றான். அல்லாஹ் பேரருள் செய்பவனாவான்."(3:75)**

**"உங்கள் உள்ளம் விரும்பாததை ஒரு தூதர் உங்களிடம் கொண்டு வந்த போதெல்லாம், நீங்கள் பெருமை கொண்டு, சிலரை பொய்யராக்கி சிலரை கொல்ல (முயல)வில்லையா? (2:88)**

இந்த நூற்றாண்டின் முஹைத்தீனும் கலீஃ.பத்துல்லாஹ்வும் நான் என இறை கட்டளைகளின்ப்படி நான் அறிவித்திருந்தேன். அல்லாஹ் வழங்கிய மற்று பெயர்களும் பதவிகளும் அந்த அறிக்கையில் உள்ளன. தெளிவாகக் கூறிக்கொண்டால், என்னிடம் பகைமையுடனிருக்கும் அஹ்மதியா முல்லாக்கள் எனக்கு எதிராக அந்நேரத்திலிருந்து எழும்பிக் கொண்டனர். இழிவானதும் மற்றும் மோசமானதுமான குற்றங்களை அவர்கள் என் மீது சாட்டிக்கொண்டனர். மார்க்க அறிஞர்கள் என்றும், இஸ்லாமின் சேவகர்கள் என்றும், மற்றும் கலீஃ.பாவின் பாதுகாவலர்கள் என்றும் உரிமைகோரிவரும் அனைவர்களும் எல்லா பகுதிகளிலும் விரைந்தோடி பொதுமக்களை, ஜமா அத்துச் சஹீஹீல் இஸ்லாமிற்கும், இந்நூற்றாண்டின் கலீஃ.பத்துல்லாஹ்விற்கும் எதிராக தூண்டிகொண்டனர்.

இந்நூற்றாண்டின் இறை அடையாளம் தோன்றியதிலிருந்து, அதாவது இந்த எளிய சேவகனாகிய நான், கலீஃ.பத்துல்லாஹ் என்றும் முஹைத்தீன் என்றும் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்ததிலிருந்து முல்லாக்கள் ஜமாத்துச் சஹீஹில் இஸ்லாமிற்கு எதிராக அவர்களின் கலப்பு அரசியல் திட்டங்களுக்கும் ஆரம்பமிட்டனர். ஆனால் ஜமா அத்துச் சஹீஹீல் இஸ்லாம் எனும் இந்த ஆவி எந்திரத்தை(steamroller) எவருக்கு தடுக்க முடியும்? எல்லாம் வல்ல இறைவன் நம்முடனே இருக்கின்ற போது, அவனிடம் சவால்விட்டு, அவன் சித்தத்திற்கு எதிராக செயல்படுவதற்கு எவருக்கு முடியும்? நிச்சயமாகவும் அவ்வாறு

செயல்படுகின்றவர்களின் முடிவு மிக கவலைக்குரியதாகயிருக்கும். ஏனெனில் அல்லாஹ் எப்போதும் இவன் தேர்ந்தெடுத்த சேவகனுக்கு ஆதரவாகயிருக்கின்றான்.

ஹஸ்ரத் ஆதம் நபி(அலை) அவர்களின் காலத்திலிருந்து நாளிதுவரையிலும் மானிட குலத்திற்கு நேர்வழிகாட்டலுக்காக அல்லாஹ் அவனது தூதர்களை எழுப்பி வந்தான். குற்றவாளியாகிய சாத்தானை அல்லாஹ்ஹின் சன்னிதியிலிருந்து வெளியேற்றிக்கொண்ட வேளையில், நியாயத்தீர்ப்பு நாள்வரையில் இறையடியார்களை ஏமாற்றி, வழிதவறச் செய்வதற்கான அனுமதியை சாத்தான் இறைவனிடம் கேட்டுக்கொண்டான். அந்நேரம் இறைவன் சாத்தானுக்கு அனுமதி அளித்தான். ஆனால் அதே கணம் இறைவன், சாத்தானிடம் உறுதியாக கூறிக்கொண்டான். **“எனது உண்மையான அடியார்களை ஒரு போதும் உனக்கு வழி தவறச் செய்ய ஆகாது”**. அன்று சாத்தானுக்கு அளித்த தண்டனையிலிருந்து அதாவது சாத்தானுக்கு கொடுக்கப்பட்ட அந்த நிலநேர்கோடிலிருந்து (சுதந்திரம் மற்றும் அனுமதி) சாத்தானுக்கும் இறையடியார்களுக்கும் இடையே தொடங்கிய போராட்டம் இன்றும் நீடிக்கிறது. பாவிகளின் தலைவனாக சாத்தானும், உண்மையான இறையடியார்களின் தலைவராக இறைத் தூதர்களும் நிலை நின்று வருகின்றனர். பூமியில் பெரும்பான்மையும் சாத்தானின் செல்வாக்கின் கீழ் வீழ்ந்திருப்பதால், அல்லாஹ் அவனது பிரதிநிதியாக தூதரை தோற்றுவித்து, அம்மக்களை நேர்வழியில் திரும்ப பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றான். அவ்வாறு ஒரு வீரகாவிய போராட்டம் ஆரம்பித்துக்கொண்டது. ஒவ்வொரு முறையும் முடிவில் சாத்தானின் குழு எண்ணிக்கையில் குறைந்து வருவதுடன் அவனது வலிமையும் இழந்து விடுகின்றது. இறுதியில் சாத்தான் தோல்வியை ஒப்புக்கொள்கின்றான். உலகின் இறுதி நாள்வரையிலும் இது நீடிக்கும். அதாவது வேறு விதமாக கூறினால், மனித குலத்தை வழி தவறச் செய்வதில் சாத்தானின் இராணுவம் வலிமை பெறும் போதெல்லாம், அல்லாஹ் தனது முடிவில்லாத கருணைகள் மூலம் சாத்தானின் ஆட்சிக்கு முடிவுகட்ட தனது சொந்த இராணுவத்தை எழுப்பிக்கொள்கின்றான்.

**இவ்விவுலகில் மனித குலம் நிலை நிற்கும் காலம் வரையில், தீமை இங்கு நடமாடும் காலம் வரையில் இறைவன் அவனது பிரதிநிதியைத் தோற்றுவித்துக் கொணடடிருப்பான். தனது தூதர்களை அனுப்பி வைத்துக்கொண்டிருப்பான். அதுவாயிலாக ஆன்மீகமும் மற்றும் நல்லொழுக்கவுமான நிலைகளில் சீரமைப்பை ஏற்படுத்திக்கொள்வான். ஆகவே இதைக் குறித்து நீங்கள் சிந்தித்துக் கொள்ளுங்கள்.** இறைவன் அவனது தூய வார்த்தைகளில் உறுதியுடன் இருக்கின்றான். அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை காத்த முன்நபீயினாக உயர்த்திக்கொண்டதும் அவனாவான். இறுதி ஷரி-அத்துமாக தோன்றிய இறைத்தூதரும் அன்னாராவார். புதிய-ஷரி-அத்துடன் இனி எந்த ஒரு இறைத்தூதரும் தோன்ற மாட்டார் என்பது உண்மையாகும். குர்-ஆனின் போதனைகளை மறுத்துக் கொள்பவர்களும் தோன்றமாட்டார்கள். அவ்வாறு தோன்றிக் கொண்டால்ஈ அது இறை வார்த்தைகளுக்கு மாறாகயிருப்பதாகும்.

இந்நிலையில் நான் எல்லா அஹ்மதியா முஸ்லீம்களிடமும் கூறுகின்றேன். அதாவது முஹம்மது(ஸல்) அவர்களுக்கு பிறகும் நபித்துவத்தின் வாசல் திறந்திருக்கும் என்று நீங்கள் வாதம் செய்கின்றீர்களல்லவா? கடந்த நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் அஹ்மதியா ஜமா-அத்தின் நிறுவனருமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது(அலை) அவர்களை நீங்கள் அங்கீகரித்து கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் செய்தவர்களல்லவா? இப்போது உங்களின் காலத்தில் அல்லாஹ்வின் ஒரு பிரதிநிதி தோன்றிய போது நீங்கள் அன்னாரை ஏற்றுக்கொள்ளாமல், ஏன் மறுத்துக் கொள்கின்றீர்கள்? அல்லாஹ்வின் அருளால் உங்களிலிருந்து அவன் என்னை தேர்ந்தெடுத்து உயர்த்திக்கொண்டான். ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களின் சமுதாயத்திலிருந்து அவன் என்னை எழுப்பி கெண்டான். என்றிருந்தும் ஏன், நீங்கள் இப்போதும் பார்வையற்றவர்களை போன்றிருக்கின்றீர்கள்? ஏன் நீங்கள் செவிடரைப்போன்றிருக்கின்றீர்கள்? பிற முஸ்லீம் பிரிவினர் “காத்தமுன்நபியீன்” என்றால், நபித்துவத்தின் இறுதியென கூறுவதைப்போன்று நீங்களும் இறைதூதர்கள் தோன்றமாட்டார்கள் என கூறுகின்றீர்களா? பின் எதற்கு அல்லாஹ் இந்த வசனத்தை திருமறையில் வைத்திருக்கின்றான்? இறுதி நாள் வரையிலும் அவ்வசனம் நிலைநிற்குமல்லவா?

அல்லாஹ் கூறுகின்றான்

**"ஆதமின் மக்களே! என் வசனங்களை உங்களுக்கு ஓதிக்காட்டக்கூடிய தூதர்கள் உங்களிடமிருந்தே நிச்சயமாக உங்களிடம் வரும் போது இறையச்சத்தை மேற்கொண்டு திருத்திக்கொள்வோருக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலையடையவுமாட்டார்."(7:36)**

முஹம்மது(ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்த ஒரு நபியும் தோன்றமாட்டார் என முஸ்லீம் பிரிவினர் கூறுவதைப்போன்று, மக்கள் தேர்ந்தெடுத்த ஒரு கலீஃ.பாவை ஏற்றுக்கொள்ளும் அஹ்மதியா முஸ்லீம்களும் கூறுகின்றனர். மஹ்திமஸீஹாக தோன்றிய மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்குப் பிறகு றூஹில் குத்துசுமாக எவரும் தோன்றமாட்டார் என்பதை நாம் அங்கீகரித்துக்கொண்டால், நபிமார்களும் மற்றும் வழிகாட்டிகளும் தோன்றுவார்கள் என திருமறை வசனத்தில் அல்லாஹ் கூறியிருப்பதற்கு நாம் என்ன விளக்கமளிப்போம்.?

திருக்-குர் ஆனில் சூரா: அந்நூறில் அல்லாஹ் கூறுகின்றான் **"அல்லாஹ் உங்களுள் நம்பிக்கைக் கொண்டு நற்செயல் ஆற்றுபோர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃ.பாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் உங்களையும் கலீஃ.பாவாக ஆக்குவான்"(24:56)**

முஹம்மது(ஸல்) அவர்களின் சமுதாயத்திலும் மூஸா(அலை) அவர்களின் சமுதாயத்திலும் கலீஃ.பாக்களை தோற்றுவித்தது போன்று, தோற்றுவிப்பான். அதாவது ஹாரூண் (அலை)மைப் போன்றும், அல்யஷா (அலை)மைப் போன்றும், தாவூது (அலை)மைப் போன்றும், சுலைமான் (அலை)மைப் போன்றும் அவன் கலீஃ.பாக்களை தோற்றுவிப்பான். மேல் கூறிய வசனத்தில் அவர்கள் கலீஃ.பாவாகயிருப்பார்கள் என்பது, அவர்களுக்கு முன்பு தோன்றிய நபிமார்களைப் போன்று இருப்பார்கள் என பொருள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அதாவது இரண்டாம் ஈஸப்னுமர்யமின் வருகையைக் குறித்து அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் திருமொழியில் இருக்கும் ஒரு தீர்க்க தரிசனத்தை நினைவு கூருங்கள். அல்லாஹ்வின் மஸீஹைப் பற்றிய அன்னாரின் ஒரு தரிசனத்தை பாருங்கள்! ஒரு

விளக்கப்படி அவரின் மேனி வண்ணம், றோஸ் நிறத்துடன் கலந்து வெள்ளை நிறமாகயிருக்கும். மற்றொரு விளக்கப்படி அவர் கருப்பு நிறமாகயிருப்பார். இந்த இரண்டு வகையிலும் மிக அழகாக (அவர்) பரிசுத்த காபாவை தவாப் செய்வார். உங்களுக்கு தெரியுமா? தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் அதாவது **“மஸீஹ் அவர்கள், உம்ரா அல்லது ஹஜ்ஜு செய்வார். அல்லது இரண்டும் செய்து கொள்வார்”**. **“ரளஹா”** என்ற இடத்தில் நின்று **“தல்பியத்து”** சொல்லுவார். (அபுகுறைரா ரிவாயத்து செய்திருக்கும் இக் கதீஸ் முஸ்லீமில் இடம் பெற்றிருக்கின்றது).

முஸ்லீம் உலகம் பிடிவாதத்துடன் ஹஸ்ரத் அஹ்மது(அலை) அவர்களின் பதவியை மிக இழிவாக காண்கின்றனர். அன்னாரின் காலகட்டத்தின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நான் என அன்னார் வாதம் செய்துவந்தார். ஆனால் நபிமொழிகளில் கூறப்பட்டிருக்கும் அத்தீர்க்கதரிசனம் அப்பொழுது நிறைவேறவில்லை. நம்மை அதாவது அஹ்மதியாகிய நம்மை பொறுத்தவரையில், நமது நம்பிக்கை உறுதியாகயிருக்கின்றது. ஏனெனில் அல்லாஹ் நம்மை கற்பித்திருப்பது என்ன, என்பதைக் குறித்து நமக்கு தெரியும். இங்கு பாருங்கள், அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை அழைத்து அல்லாஹ் கூறுகின்றான்.

**“எனவே நீர் பொறுமை கொள்வீராக. நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறியே தீரும். நாம் அவர்களிடம் வாக்களித்தவற்றின் ஒரு பகுதியை நாம் உமக்கு காட்டினாலும் சரியே அல்லது நாம் உம்மை மரணமடையச் செய்தாலும் சரியே எம்மிடமே அவர்கள் திரும்பக் கொண்டுவரப்படுவார்கள். நிச்சயமாக நாம் உமக்கு முன்னர் பல தூதர்களை அனுப்பினோம். அவர்களுள் சிலரைப் பற்றி நாம் உமக்குக் கூறியுள்ளோம். நாம் உமக்குக் கூறாதவர்களும் அவர்களுள் சிலர் உள்ளனர். அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த தூதராலும் எந்த அடையாளத்தையும் கொண்டுவரயியலாது. ஆனால் அல்லாஹ்வின் கட்டளை வரும் பொழுது உண்மைக் கேற்ப தீர்ப்பளிக்கப்படுகிறது. பொய்யாக்குபவர்கள் அங்கு இழப்பிற்கு ஆளாகி விடுகின்றனர் (40 : 78,79)**

அல்லாஹ்வின் அருளால் நமது இக்காலகட்டத்தில் அந்த நேரம் வந்தடைந்துள்ளது. அதாவது இந்த எளிய சேவகனாகிய என்னை இறைத்தூதராக அல்லாஹ் தேர்ந்தெடுத்துள்ளான். அல்லாஹ்வின் மாபெரும் அருளால் முஹம்மது(ஸல்) அவர்களுடையவும் அஹமது (அலை) அவர்களுடையவும் நேர்மைத் தோழனாகிய நான் மூலமாக அல்லாஹ் அத்தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றியிருக்கின்றான். நமது அன்புக்குரிய தூதர் முஹம்மது (ஸல்)வின் தீர்க்கதரிசனம் இந்த எளிய அடியான் வழியாக அதாவது அல்லாஹ்வின் மஸீஹான என்வாயிலாக அல்லாஹ் பூர்த்தியடையச் செய்திருக்கின்றான். இந்நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மூன்று முறை உம்ரா செய்திருக்கின்றார். இது அல்லாஹ்விடமிருந்து எனக்கு கிடைத்த மிகப்பெரிய ஒரு மரியாதையாகும். பல்வேறு சிரமங்களுக்குப்பின் அல்லாஹ் எனக்கு அதற்கான வழியினை திறந்துதந்தான். 2018 பிப்ரவரி 20-ம் தேதி அதாவது “முஸ்லீஹ் மௌஊத்” தினத்தில் இதை நிறைவேற்றிட முடிந்தது என்பது மகிழ்ச்சிமிக்கதாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹமது(அலை) அவர்களுக்கு ஒரு வாக்களிக்கப்பட்ட மகன் மற்றும் ஒரு வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளர் பிறப்பதாக அன்னார் தீர்க்க தரிசனம் செய்த நாள் பிப்ரவரி 20-ம் தேதியாகும்.

**இறைவெளிப்பாடுகளுடன் அல்லாஹ் என்னை, அவன் தேர்ந்தெடுத்த சேவகனாக எழுப்பி, தற்போது 17 வருடங்கள் பின்செல்கின்றது. (2001 – 2018)**

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் உருவாகி தற்போது, 10 வருடங்கள் பின்னடைகின்றது. **அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்**

வாக்குறுதியை நிறைவேற்றிய அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும். 2017 மார்ச் மாதம் 22-ம் தேதி எனக்கு ஆங்கில மொழியில் கிடைத்த ஒரு இறைச்செய்தியை நினைவு கொள்ளுங்கள்.

***“When you leave Makkah bring Islam home, not just dates and Zamzam water”***

**“நீங்கள் மக்காவிலிருந்து வரும் போது, இஸ்லாமை உம் மனைக்கு கொண்டு வாருங்கள். வெறும் பேரீச்சம்பழமும் மற்றும் சம்சம் தண்ணீரும் மட்டுமல்ல!”**

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் வெற்றியின் பாதையிலாகும். ஆம் இறை வெற்றியை நோக்கி அது பயணம் மேற்கொள்ளுகின்றது. இது, இறைவன் என்னை தோற்றுவித்ததிலிருந்தே எனக்கு கிடைத்த இறைவாக்குறுதியாகும்.

அல்லாஹ்வின் அருளால் நான் மக்காவிலும் மதினாவிலும் தங்கியிருந்த வேளைகளில் அவன் எனக்கு வெளிப்பாடுகளும், தரிசனங்களும் மற்றும் தூய கனவுகளும் வழங்கிக் கொண்டான். என்மீது நம்பிக்கை கொண்ட பிறகு என்னை விட்டு அகன்று சென்றவர்கள், உள்ள பூர்வமாக மனந்திரும்பிக் கொண்டால் அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பை அளிப்பதாக அவன் என்னை தெரிவித்திருக்கின்றான்.

**இறுதியாக பல்வேறு பிரிவினை சார்ந்த என் முஸ்லீம் சகோதரர்களே! அஹ்மதி சகோதரர்களே! நான் இந்நூற்றாண்டில் இறைவனிடமிருந்து வந்துள்ளேன். என்வருகையின் நோக்கம் சீரமைப்பு மட்டுமின்றி உண்மையான இறைபோதனைகளை மக்களுக்கு கற்பிப்பதற்குமாகும். முழு உலகிற்காகவும் அனைத்து மக்களுக்காகவும் நான் தோன்றியிருக்கின்றேன்.** எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து இறைத்தூதர்கள் தோன்றிய போதெல்லாம் பூமியில் வாழும் மக்கள் அவர்களிடம் மிக மோசமாக நடந்துக் கொண்டனர். இறைவனிடமிருந்துள்ள உண்மையான நம்பிக்கையை பெற்றுக் கொண்டவர்களைத் தவிர! அறிவற்றவர்களும் கர்வமுடையவர்களுமான ஆட்கள் இறைதூதர்களை கேலி செய்வது வழக்கமாகும். அத்தகையாளர்கள் இறைத்தூதர்களை அவமானப்படுத்துகின்றனர் மற்றும் துன்புறுத்திக் கொள்கின்றனர். என்னையும் அதிலிருந்து விட்டு வைக்கவில்லை. ஆனால் இறை சித்தத்தை தடுத்துக் கொள்ள மனிதனுக்கு ஒருபோதும் ஆகாது. இறுதியில் இறைத்தூதர் தாம் வெற்றியடைந்து விடுவது. **அல்ஹம்துலில்லாஹ்!**

திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறியிருக்கின்றான்.

**"நிச்சயமாக நானும் என் தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் மிக்கவனும் வெற்றிக்குரியவனுமாவான்"(58 : 22)**

நம் தியாகங்களையும், பிரார்த்தனைகளையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக! நம்மீது அவன் அருட்கொடைகளை பொழிவானாக! முடிவில், உலகம் அவனது அடையாளங்களையும், அவனது அத்தாட்சிகளையும் மற்றும் அவனது தூதரையும் அங்கீகரித்துவிடட்டும்! ஒரு நல்ல உலகிற்காக அவர்கள் சுயம் சீர்திருந்திக் கொள்ளட்டும்! அவர்களின் சுய பாதுகாப்பிற்காக அவர்கள் தங்களை சுயம் சீர்திருத்திக் கொள்ளட்டும்! இன்ஷா அல்லாஹ். ஆமீன்.


**Translated by:**
*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663